R5220

# The New Creature's Struggle for Existence
# வாழ்வதற்கான புது சிருஷ்டியின் போராட்டம்

"மற்றவர்களுக்கு பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கி கீழ்ப்படுத்துகிறேன்."
1கொரிந்தியர் 9:27

கிறிஸ்தவர்களிடம் இரட்டைத் தன்மை உள்ளதை மற்றவர்களால் கண்டுணர முடியாது. சுபாவ மனிதனுக்கு தனது சரீரத்தை தவிர தனிப்பொருள் எதுவும் கிடையாது. ஆனால் புது சிருஷ்டிக்கு சரீரத்திலிருந்து வேறுபட்ட ஒரு வாழ்க்கையும் தனிப் பொருளும் இருப்பதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த புது சிருஷ்டியானது தற்காலிகமாக பழைய சரீரத்தில் போஷிக்கப்பட்டு, அபிவிருத்தி பண்ணப்படுகிறது. பழைய சரீரம் அதன சித்தத்தையும் விருப்பத்தையும் கொண்டுள்ளது. இதன் விளைவாக அவைகளுக்குள்ளே முரண்பாடு இருக்கிறது.

இந்த வசனத்தின் கடைசி பகுதியாகிய, "என் சரீரத்தை கீழ்ப்படுத்துகிறேன்" என்பது ஆதிக்கம் உடையதாக நாம் காண்கிறோம். பழைய சிருஷ்டியானது புது சிருஷ்டியை கீழே தள்ளி கழுத்தை நெறிக்குமோ என்ற பயம் இருக்கிறபடியால் புது சிருஷ்டியானது இப்படியாகச் சொல்ல வேண்டும்: "நான் தான் எஜமான். எனது சரீரம் என்னை அடக்கி ஆள நான் அனுமதிக்க மாட்டேன்." எது வெற்றிகொள்ளும், எது அழியாதபடிக்கு ஜீவிக்கும் என்று தீர்மானிப்பதில் ஒரு போராட்டமாக இது இருக்கும்.

புது சிருஷ்டி முதலாவது செய்ய வேண்டியது, சரீரத்தை கீழ்ப்படுத்தி இப்படியாக ஆளுகை செய்ய வேண்டும், புது சிருஷ்டி இந்த ஆளுகையை பெற்ற பிறகு இரண்டாவது செய்ய வேண்டியது, பழைய சுபாவத்தை கீழ்ப்படுத்தி அதன் உத்தரவுக்கு கீழ்ப்படியாதிருப்பது. பழைய சுபாவம் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே இருக்கும். இது அடிக்கடி தன்னை எப்படி நடத்த வேண்டும் அல்லது எப்படி நடத்தக்கூடாது என்று வாதாடிக் கொண்டே இருக்கும். சில சமயங்களில் தவறாக தயவினால் இது மிகவும் சிறப்பாக நடத்தப்படும். பழைய சிருஷ்டியின் வாழ்வு என்பது புது சிருஷ்டியின் மரணம் என்பதை நாம் நினைவுகூர வேண்டும். நாம் மாம்சத்தை மறைந்து போகப் பண்ண வேண்டும். மாம்சம் முற்றிலுமாக அழியும் வரை நாம் வெற்றிக் கொள்ள முடியாது. பழைய சிருஷ்டி மரிக்கும் வரை புது சிருஷ்டியாக நாம் ஜெயம் கொள்ள முடியாது. ஆகையால் போராட்டம் மரணம் வரை இருக்கும். இரண்டு சுபாவங்களுக்கும் இடையே அனுதாபம் இருக்கக்கூடாது.

உயிர்ப்பித்தாலும், ஊக்குவித்தாலும் மாம்சமானது எந்த விதத்திலும் சத்துருவாக இருக்கிறது. அது நமது இருதயத்திலிருந்து அகற்றப்பட வேண்டும். இது சில காரியங்களில் நமது நடத்தையை தீவிரப்படுத்த வழிநடத்தும். நாம் தீவிரவாதிகளாக உலகத்தால் தீர்மானிக்கபடுவோம். ஆனால் உலகம் நமது நியாயதிபதி அல்ல. உலகமானது, "அவர்களுக்காக மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களை" பெற்றிருக்கவில்லை. அவர்கள் முற்றிலுமாக நம்மிலிருந்து வேறுபட்ட வகுப்பார். நாம் அவர்களிடமிருந்து புத்திமதி பெறவோ, காரியங்களில் நமது கருத்தை உருவாக்க அவர்களை அனுமதிக்கவோ கூடாது. எல்லா காரியங்களிலும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே பயன்படுத்த வேண்டும்.

## மாம்சீக மரணம் அத்தியாவசியமானது

நாம் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களாகி அவரோடு பாடு படவேண்டும். நமது சிலுவையை எடுத்துக்கொண்டு அவரை பின்பற்ற வேண்டும் என்று நமது ஆண்டவர் அழைக்கிறார். இது மாம்சத்தை முற்றிலுமாக கீழ்ப்படுத்துவதை - மாம்சத்தின் மரணத்தை அர்த்தப்படுத்துகிறது. நம் மாம்சத்தை வெற்றி கொள்ள தவறினால், மாபெரும் பரிசை பெறுவதில் தவறிவிடுவோம். பரம அழைப்பின் பந்தயப் பொருளை பெறுபவர்கள், மாம்சத்தை சிலுவையிலறைந்து அதை மரணத்திற்கு ஒப்புக் கொடுப்பார்கள். நாம் "முற்றும் ஜெயங்கொண்டவர்களாக" இருக்க வேண்டும்.

இந்த பொருளில் தான் அப்போஸ்தலர் கூறுகிறார்: மற்றவர்களுக்கு பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதாவனாய் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன். மற்றவர்களுக்கு போதிக்கிறவைகள் அனைத்தும் என்னை ராஜ்யத்துக்கு கொண்டு போகாது. சகல விடா முயற்சியையும் பயன்படுத்தி நான் எனது சரீரத்தை ஒடுக்கி கீழ்ப்படுத்த வேண்டும். நான் வெளியேறுவது எதுவாக இருந்தாலும் அதற்கு நான் அதிக சலுகை காட்டினாலும் அது எனக்கு எந்த வகையிலும் சேதமாகவே இருக்கும். நான் ஆகாதவனாய் போகாதபடிக்கு வெற்றியை நிறைவேற்றவே நான் கவனமாய் இருக்க வேண்டும்.

## புது சித்தத்தின் அறிவு நிபந்தனைக்கு உட்பட்டது

சபையானது தேவனுடைய ஒரு புது சிருஷ்டி என்று அப்போஸ்தலர் வேறு இடத்தில் நமக்கு சொல்லியிருக்கிறார். மேலும் அவர், பரிசுத்த ஆவியினால் மறுபடியும் ஜெனிப்பிக்கப் -பட்டவர்களிடம் பழையவைகள் எல்லாம் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின என்றும் கூறியிருக்கிறார். (2 கொரிந்தியர் 5;17) அதே வகுப்பாரை நோக்கி அவர் கூறுகிறாதவது: "உங்கள் பழைய மனிதனுடைய செய்கைகளை களைந்து போட்டிருக்கிறீர்கள்." நாம் ஆதாமின் வழியில் வந்த விழுந்து போன மனிதனை, சுபாவ மனிதனை, பழைய மனிதனை களைந்து போட்டிருக்கிறோம். இதே பொருளில் நாம் பழைய சித்தத்தை களைந்து போட்டு, கிறிஸ்துவில் ஒரு புது சித்தத்தை பெற்றிருக்கிறோம். ஆகையால் நாம் மனித குடும்பத்திலிருப்பதற்கு பதிலாக கிறிஸ்துவின் சரீர அங்கத்திற்குள்ளாக, பழைய மனிதனிலிருந்து புது மனிதனுக்குள்ளாக நாம் நுழைந்து இருக்கிறோம்.

கிறிஸ்துவின் சரீரம் மனிதத்தன்மையுடையது அல்ல, ஆனால் ஆவிக்குரியது. நாம் ஒரு குடும்பத்திலிருந்து அதன் நம்பிக்கை மற்றும் உரிமைகளிலிருந்து மற்றதுக்கு மாற்றம் செய்திருக்கிறோம். பழைய மனு-ன் ஒவ்வொரு வழியிலும் விழுந்துபோன மற்றும் பாழான நிலைமையில் இருக்கிறான். அவனது செய்கைகள் நமக்கே திருப்தியில்லாமலும் இன்னும் விசே-மாக தேவனுடைய பார்வையில் திருப்தியில்லாமலும் இருக்கின்றன. ஆகையால் நமது சித்தத்தின் மூலம் இந்த நிலைமையிலிருந்து, உன்னதத்திலிருந்து வருகிற வழிகாட்டுதலின் கீழ் வெளியேறியிருக்கிறோம். நாம் புதிய மனிதனாக, கிறிஸ்துவாக இருப்பதற்கு பழைய சுபாவத்தில் நாம் பெற்றிருந்த சகல பழைய உரிமைகளையும் விருப்பங்களையும் முழுமையாக அர்ப்பணித்திருக்கிறோம்.

இயேசு தலையாக இருக்கிற கிறிஸ்து என்கிற புதிய மனு-னுக்குள் நாம் அங்கமாக வந்திருக்கிறபடியால், இந்த தலையானவருக்கு கீழ் அறிவு பெருக்கத்தில் நாம் இருக்கிறோம். "தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனு-னை தரித்துக் கொண்டிருக்கிறோம்." பரிசுத்த ஆவியினால் இயக்கப்படுதல் மற்றும் மானிட சித்தத்தை விட்டுவிடுகிறதற்கேற்ப புது சிருஷ்டியானது, புதிய சித்தத்தின் தெளிவான அறிவிற்கு அதிகமாக வருகிறது.

கிறிஸ்துவை தரித்துக் கொள்வதற்காகவும் அவரது சரீரத்தில் அங்கங்களாக காணப்படவும், மகா மேன்மையான மகிமையை அவரோடு கூட ஒரு பங்கை பெறும்படியாகவும் முடிவாக தேவனுடைய ராஜ்யத்தில் ஒரு இடத்திற்கு பாத்திரராகும் படியாகவும், நாம் பழைய மனிதன் ஆதாமையும் பொதுவான மனித சுபாவத்தையும் களைந்து போடும்படி இது காணப்படுகிறது. நாம் கிருபையிலும் அறிவிலும் வளருவதற்குத்தக்கதாக பரலோக காரியங்களை நாம் உணர்ந்து கொள்ளுதல் அதிகரிக்கிறது. இப்படியாக நமது புதுப்பித்தல் முன்னேறுகிறது.

பரிசுத்த ஆவியின் ஜெனிப்பித்தலில் தேவனால் அங்கீகரிக்கப்பட்ட புது சித்தம் தான் புது சிருஷ்டி. இப்படியாக இது பழைய மனு-னை களைந்து போட்டு புதிய மனு-னை அணிந்து கொள்ளுகிறது. புது சிருஷ்டியின் வாழ்வு இந்த மாற்றத்தை பொருத்தே இருக்கிறது. அதில் தோல்வி என்றால் இரண்டாம் மரணம் தான். தேவைக்கும் குறைவான வெற்றி என்றால் ஆவிக்குரிய தளத்தில் ஒரு தாழ்மையான இடம் திரள் கூட்டத்தில் கிடைக்கும். "முற்றும் ஜெயங்கொண்டவர்கள்" மட்டுமே கர்த்தருக்கு உடன் சுதந்தரத்தையும், மகா மேன்மையான மகிமையையும் தெய்வீக சுபாவத்தையும் பெறுவார்கள்.